**செய்தி வெளியீடு எண்: 868** **நாள்: 28.06.2024**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.01.2023 அன்று வெளியிட்ட செய்தி வெளியீட்டில் "புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள் தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும்" என்று அறிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஆஸ்திரேலியா, பிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து 57 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, இவ்வாணையரகம் மூலம் 27.12.2023 முதல் 10.01.2024 வரை 15 நாட்களுக்கு தமிழகத்தின் முக்கிய சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாட்டின் கலை, பண்பாடு குறித்து விளக்கப்பட்டது.

தற்போது இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் வருகின்ற ஆகஸ்ட் 01, 2024 அன்று தொடங்கப்பட்டு ஆகஸ்ட் 15, 2024 வரையிலான 15 நாட்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்க இதுவரை (28.06.24 வரை) தென் ஆப்ரிக்கா, உகாண்டா, பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை ஆகிய பதினொரு நாடுகளைச் சேர்ந்த 107 அயலகத் தமிழ் மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வேர்களைத்தேடி பயணத்திட்டம்

| நாள் | தேதி | மாவட்டம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| நாள் 1 | 01.08.2024 | சென்னை | வரவேற்பு மற்றும் சுற்றுலா குறித்த விளக்கம் |
| | | | மாண்புமிகு வெளிநாடு வாழ் தமிழர் |

| | | | |
|---|---|---|---|
| | | | நலத்துறை அமைச்சருடன் கலந்துரையாடல் |
| நாள் 2 | 02.08.2024 | செங்கல்பட்டு | தக்சின்சித்ரா பாரம்பரிய அருங்காட்சியகம் |
| | | | இந்திய சீஷெல் அருங்காட்சியகம் |
| | | | கலங்கரை விளக்கம் |
| நாள் 3 | 03.08.2024 | செங்கல்பட்டு & கடலூர் | மகாபலிபுரம் கடற்கரை கோவில் மற்றும் கடற்கரை பார்வையிடுதல் |
| | | | சிற்ப அருங்காட்சியகம் & சிற்ப பயிற்சி |
| நாள் 4 | 04.08.2024 | கடலூர், அரியலூர் & தஞ்சாவூர் | வீராணம் ஏரி |
| | | | கங்கைகொண்ட சோழபுரம் |
| | | | கலாச்சார பட்டறை & கல்வெட்டு பயிற்சி, சுவாமி மலை |
| | | | தராசுரம் கோவில் |
| நாள் 5 | 05.08.2024 | தஞ்சாவூர் | தஞ்சை பெரிய கோவில் |
| | | | சரசுவதி மகால் நூலகம் |
| | | | தஞ்சாவூர் கலைக்கூடம் |
| நாள் 6 | 06.08.2024 | தஞ்சாவூர் | கலை மற்றும் பண்பாட்டு பயிற்சி பட்டறை –தமிழ் பாரம்பரிய இசை & பரதநாட்டியம். |
| நாள் 7 | 07.08.2024 | புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை | சித்தன்னவாசல் குகை |
| | | | கானாடு காத்தான் அரண்மனை |
| நாள் 8 | 08.08.2024 | தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி | பாரதியார் பிறந்த இடம் |
| | | | கி இராஜநாரயணன் நினைவில்லம் |
| | | | தமிழ் மொழி பயிற்சி பட்டறை |
| | | | கட்டபொம்மன் நினைவில்லம் |
| நாள் 9 | 09.08.2024 | கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி | திருவள்ளுவர் சிலை |
| | | | ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வு தளம் |
| | | | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் |
| நாள் 10 | 10.08.2024 | திருநெல்வேலி | நெல்லையப்பர் கோலில் |
| | | | வ.உ.சி நினைவில்லம் |
| நாள் 11 | 11.08.2024 | தென்காசி | குற்றாலம் நீர்வீழ்ச்சி |
| | | | தமிழ் மொழி மற்றும் சித்த மருத்துவ பயிற்சி பட்டறை |
| நாள் 12 | 12.08.2024 | மதுரை | மீனாட்சி அம்மன் கோவில் |
| | | | காந்தி மண்டபம் |
| | | | திருமலை நாயக்கர் மகால் |
| நாள் 13 | 13.08.2024 | சிவகங்கை & திருச்சி | கீழடி அருங்காட்சியகம் |
| | | | கல்லணை |
| நாள் 14 | 14.08.2024 | விழுப்புரம் | செஞ்சிக் கோட்டை |
| | | | மேல் சித்தமூர் ஜெயின் கோவில் |
| | | | செஞ்சி கிராமத்தின் கலாச்சாரங்கள் அவற்றின் நடைமுறைகள். |

இத்திட்டத்திற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள அயலகத் தமிழர் நல ஆணையரகத்தின் கூட்ட அரங்கில் இன்று 28.06.2024 நடைப்பெற்ற சிறப்பு கூட்டத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள் பங்கேற்று தமிழ்நாடு வரும் அயலகத் தமிழ் மாணவர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள அரசுத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர், திரு. பா. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, கலை பண்பாட்டுத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu